# சூரிய காந்தி

SOORIYA GANDHI

விலை ரூபா 5-00



வினோவின் தரம்
என்றும் நிரந்தரம்

புதிய சிங்கப்பூர் டிசைன் நகைகள்
22 கரட் நகைகள் பெற
நம்பிக்கையான இடம்

வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



மலர் 1 திங்கட்கிழமை 2 - 2 - 1998 இதழ் 1


# கிளிநொச்சியில் படையினர் மீது புலிகள் மிகப்பாரிய தாக்குதல்

## அதிகாலையில் கடும் சமர் வெடித்தது

கிளிநொச்சியில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் மீது நேற்று அதிகாலை முதல் விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதலை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நேற்று அதிகாலை 1.50 மணியளவில் ஆரம்பமான இத்தாக்குதல் தொடர்ந்து நடைபெறுவதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எனினும் தாக்குதலைத் தாம் முறியடித்துவிட்டதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து நேற்று மாலை வரை 250க்கு மேற்பட்ட காயமடைந்த இராணுவத்தினர் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நிலைகள் மீது விடுதலைப் புலிகள் கடும் பீரங்கித் தாக்குதல் நடத்தியதாகவும் மோதல்கள் தொடர்ந்து நடைபெறுவதால் முழுமையான விபரங்கள் வெளிவரவில்லை என்றும் புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

## புலிகள் தரப்பில் 26பேர் உயிரிழப்பு

### - புலிகளின் வானொலி தெரிவிப்பு

கிளிநொச்சி - பரந்தன் முகாம்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களின்போது தமது தரப்பில் களப்பலியான 26 போராளிகளின் பெயர் விபரங்களை 'புலிகளின் குரல் வானொலி' நேற்று வெளியிட்டது அவர்களின்விபரம் வருமாறு,

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கந்தசாமி' உதயகுமார் மாணிக்கம் அகிலன், நடராசா சந்திரசேகரம், சந்திரசேகரம் குலேந்திரன், இராஜரட்ணம் ஜெனீற்றா, மகாராசா நிர்மலாதேவி, ஆறுமுகம் இராஜேந்திரன், நாகராசா பாஸ்கரன், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த நல்லதம்பி சிவகுமார், கந்தசாமி நளாயினி

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கிருஸ்ணராசா வில்சன், சுப்பிரமணியம் குழந்தைவேல், தம்பிராசா இராஜேந்திரன், தியாகராசா ரஞ்சன், கிருஷ்ணகுமார் தர்மலிங்கம், சோமசுந்தரம் சுதர்சன், கோபாலபிள்ளை இராஜேஸ்வரன், கனகசிங்கன்

(8 ம் பக்கம் பார்க்க)

## தரைப்படைக்கு உதவ விமானங்கள் விரைவு

கிளிநொச்சியில் மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு தரைப்படையினருக்கு உதவு முகமாகவிமானப்படை விமானங்கள் அப்பகுதிக்கு அனுப்புப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அதிகாரிகள் கொழும்பில்தெரிவித்தனர்.

விமானப்படையின் கிபிர் ஜெட் விமானங்களும் ஏனைய தாக்குதல் விமானங்களும்கிளிநொச்சியில் தரைப்படைக்கு உதவியாக புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தி வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

## குண்டு வீச்சில் மக்கள் பாதிப்பு

கிளிநொச்சியை அண்டிய பிரதேசங்களில் நேற்று விமானப்படை விமானங்கள் நடத்திய குண்டுவீச்சினால் சிலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளதாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முத்தையா குணசீலன், முரசுமோட்டையைச் சேர்ந்த வ. முருகேசு (52 வயது) ஆகியோர் காயமடைந்தவர்களில் அடங்குவர் என புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

## இராணுவ நிலைகளுக்கு அருகில் புலிகள் ஊடுருவி வந்தனர்

கிளிநொச்சி இராணுவ முகாம்களின் முன்னணி நிலைகளை ஊடுருவ முயன்ற விடுதலைப் புலிகள் சில இடங்களில் இராணுவ பீரங்கி நிலைகளுக்கு மிக அருகில் வந்து தாக்குதல் நடத்தியதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் தொலைபேசி மூலம் அறிவித்ததாக இலங்கை வானொலி தெரிவித்தது.

புலிகளின் இத்தகைய ஊடுருவல்களைப் படையினர் எதிர் பார்த்திருந்ததால் அவற்றைத் தாம் முறியடித்துவிட்டதாகவும் வடக்கில் இவ்வருடம் ஆரம்பித்ததற்கு நடந்த முதலாவது பாரிய மோதல் இது என்றும் அவ்வதிகாரி தெரிவித்ததாக இலங்கை வானொலி மேலும் குறிப்பிட்டது.

## குண்டு வெடிப்புச் சத்தம் குடாநாட்டிலும் எதிரொலி

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் நேற்று அதிகாலை வெடித்த பாரிய மோதலினால் எழுந்த குண்டு வெடிப்புகளின் சத்தம் குடாநாட்டையும் அதிரச்செய்தது.

அதிகாலை முதல் நேற்று மாலை வரை தொடர்ச்சியாக இக்குண்டுச் சத்தங்கள் குடாநாட்டை உலுக்கியதை உணரக் கூடியதாக இருந்தது.

## உயிரிழப்புகள் குறித்து முரண்பட்ட தகவல்கள்

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற மோதல்களில் 29 படையினர் கொல்லப்பட்டதாகவும் புலிகள் தரப்பில் 300 பேர் உயிரிழந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு நேற்று மாலை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இம்மோதல்களில் 86 படையினர் காயமடைந்து அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் எனக் குறிப்பிட்ட பாதுகாப்பு அமைச்சு புலிகளின் 218 சட

(8ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் தீர்வுத் திட்டம் மகா சங்கங்கள் நிராகரிப்பு

இனப்பிரச்சனைக்கான இலங்கை அரசின் தீர்வுத் திட்டத்தை மூன்று முக்கியமான பௌத்த பிரிவுகளின் தலைவர்கள் நிராகரித்து உள்ளார்கள். மல்வத்த, அஸ்கிரிய, அமரபுர, ஆகிய மூன்று மகாநாயக்கர்களுமே அரசின் தீர்வுத் திட்டத்தை நிராகரித்து உள்ளனர். தீர்வுத்திட்டம் நாட்டை இனரீதியாக பிளவுபடுத்தும் என்றும் இந்த மகாநாயக்கர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அமைதியை உண்டாக்குவதற்குப் பதிலாக தனி ஈழம் ஒன்றை அமைப்பதற்கு இத்தீர்வுத் திட்டம் வழிவகுக்கும் என்று அவர்கள் குற்றம் சாட்டினர். அதே நேரத்தில் மத்திய அரசில் அனைத்து இன மக்களும் பங்கு கொள்ள வேண்டுமென்று பிரதான எதிர்கட்சியான ஐ.தே.கட்சி கூறியுள்ளது.

பெரிய



## உண்மைக் காரணம் இதுதான் !

துரை

''எல்லாருமே வேண்டாம்'' என்றார்கள் ஆனால் யார் சொல்லவும் கேட்காமல் சந்திரிக்கா தேர்தலை நடத்தி முடித்து விட்டார். இவ்வளவு அவசரமாகவும் ஆர்வமாகவும் தேர்தலை நடத்தவேண்டிய காரணம் என்ன? மிக மிக உயர்ந்த மட்டத்திலிருந்து காரணம் கசிந்து வெளிவந்திருக்கிறது.

''ரிவிரெச'' இராணுவ நடவடிக்கை முடிந்து ஆண்டுகள் இரண்டாகி விட்டபோதிலும் வடக்கில் புலிகளின் நடமாட்டத்தையும் ஊடுருவலையும் இராணுவத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை. கிராமசேவகர் மட்டத்திலிருந்து பிரதேச செயலர்வரை மட்டுமல்ல' இன்னும் பல திணைக்கள ஊழியர்களும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்தவர்களும் புலிகளின் செல்வாக்குக்கு உட்பட்டு செயல்படுவதாகவும், பல வர்த்தகர்கள் புலிகளுக்கு தொடர்ந்து பண உதவி செய்வதாகவும் இராணுவத்துக்கும் அரசின் உயர் மட்டத்துக்கும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

இப்படியான எல்லார் மீதும் நடவடிக்கை எடுக்கத் தொடங்கினால் பலரது அதிருப்திக்கும் ஆளாக நேரிடும், மனித உரிமை மீறல்கள் என்ற குற்றத்தைச் சுமக்க நேரிடும், கோர்ட் வழக்குகளில் தோல்வியையும் சந்திக்க நேரிடும்.

இந்தச் சிக்கல்கள் எதுவும் இல்லாமல் புலிகளுக்கு கிடைத்துவரும் உதவிகளைத் தடுப்பதற்கு அரசு கண்டுபிடித்த சுலபமான வழிதான் தேர்தல் ஒன்றின் மூலம் பல்வேறு மாற்றுக் கட்சியினரையும் பல்வேறு பிரதேச சபைகளிலும், மாநகர சபை, நகரசபைகளிலும் ஆட்சி செலுத்தும்படி செய்வது!

தெரிவு செய்யப்பட்டவர்கள் சட்டபூர்வமாக இல்லாவிட்டாலும், மனதளவில் கட்சிமாறினால் சிக்கல்கள் பெரிதாகிவிடும்!

## சிறுத்தீவுக்கருகில் சடலத்தை கண்டேன்

### குருநகர் மீனவர் தெரிவிப்பு

நேற்று முன்தினம் காலை குருநகர் இறங்கு துறையில் இருந்து தொழில் செய்வதற்காக குடாக்கடலுக்குச் சென்றுபின்னர் எமது தொழிலை முடித்து 10 மணியளவில் குருநகர் இறங்கதுறைக்கு திரும்பி வந்தபோது சிறுத்திவுக்கருகாமையில் உள்ள பிட்டியில் ஒரு சடலம்கிடப்பதைக்கண்டேன் என்னுடன் வேறு இருவரும் வள்ளத்தில் வந்தார்கள். குருநகர் இறங்கு வறையில் உள்ள இராணுவத்தினர் அச் சடலத்தை எடுத்துவரும்படி பணிக்கவே நாங்கள் அங்கு சென்றோம். சடலம் தலைகுப்புறக்கிடந்தது. என்று நேற்று முன்தினம் சிறுத்தீவுப் பகுதியில் இறந்த நிலையில் கிடந்த பொலிசாரின் உடலை குருநகர் இறங்கு துறைக்கு எடுத்து வந்த குருநகர் மீனவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இச் சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டது அவரது முதுகில் துப்பாக்கி வேட்டுக்காயம் காணப்பட்டதுடன் அவரது பட்டியில் சிரனைட், பேர்ஸ் ஆகியவையும் காணப்பட்டது சடலத்தை ஐந்து மாடிக்கு முன்பாக இராணுவம் எம்மிடமிருந்து பொறுப்பேற்றனர் என்றார் (நி-1)

### பத்து சடலங்கள் அடக்கம்

காலியில் கடந்த வெள்ளியன்று நடந்த கோஷ்டி மோதலில் குழு ஒன்றினால் கொல்லப்பட்ட 16 பேரில் 10 பேரின் சடலங்களுக்கு எவரும் உரிமை கோரவில்லை இவை அரச செலவில் அடக்கம் செய்யப்படும்.


## விற்பனையாகிறது!

❀ விண்ணில் சனி மாற்றம் மண்ணில் உங்கள் கர்ம பலன்

❀ 1998 ம் ஆண்டு உங்களுக்கு எப்படி?

சோதிடர்:

வி. ஏ. சிவராஜா (வேலணை)

152 பி, அரசடி றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.


500 ரூபாவிலிருந்து பத்தாயிரம் ரூபாவானது

# தேர்தல் கட்டுப்பணம் உயர வேட்பாளர் தொகை சரிவு

(இந்திய பொதுத் தேர்தலில் போட்டியிட செலுத்த வேண்டிய கட்டுப்பணத்தின் தொகை கூட்டப்பட்டுள்ளதால் போட்டியிடும் வேட்பாளர்களின் தொகை குறைந்துள்ளது. (500 ரூபாவிலிருந்து 10,000 ரூபாவாக கட்டுப்பணத்தின் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் கடந்த தேர்தலை விட இம்முறை குறைந்தளவிலேயே வேட்பாளர்கள் காணப்படுகின்றனர். (தமிழகத்தில் நேற்று வேட்பாளர்கள் வேட்பு மனுக்களை விலக்கிக் கொண்டபின் 296 வேட்பாளர்களே தமிழக தேர்தல் களத்தில் தற்போது உள்ளனர். கடந்த தேர்தலில் தமிழகத்தில் 796 வேட்பாளர்கள் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

ராஜீவ் கொலையில்

## தி.மு.க. குற்றமற்றது தீர்ப்பின் மூலம் தெளிவு

### குஜ்ரால் தெரிவிப்பு

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக சென்னை சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தி.மு.க. குற்றமற்றது என்பதை நிரூபித்துள்ளதென இந்தியப் பிரதமர் திரு. ஐ. கே. குஜ்ரால் நேற்று தெரிவித்தார்.

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக 'ஜெ' யின் கமிஷன் வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்து மத்தியில் தி.மு.க. அமைச்சர்களை வெளியேற்ற வேண்டுமென காங்கிரஸ் கட்சி விடுத்த கோரிக்கையை பிரதமர் குஜ்ரால் ஏற்றுக் கொள்ளாததும் அதனால் காங்கிரஸ்கட்சி ஐக்கிய முன்னணிக்கு வழங்கி வந்த ஆதரவை நீக்கிக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி சபைகள் 18 இல் ஆரம்பமாகிறது

யாழ். மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் எதிர்வரும் 18ஆம் திகதிமுதல் ஆரம்பிக்கின்றது.

### பிரசாரம் தீவிரம்

இந்திய தேர்தலின் முதற்கட்டவாக்குப் பதிவுக்கு இன்னும் இருவாரகாலம் எஞ்சியுள்ள இந்நிலையில் பிரசாரங்கள் தீவிரமடைந்துள்ளன - பிரசார வேலைகளில் கட்சித் தலைவர்கள் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். தி.மு.கழக தமிழ் மாநிலகாங்கிரஸ் கூட்டணியின் பிரசாரக் கூட்டத்தை பிரதமர் ஐ. கே. குஜ்ரால் இன்று மாலை. சென்னையில் தொடக்கி வைக்கின்றார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தல் மூலம் தெரிவான உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் விரைவில் வர்த்தகமானியில் வெளியிடப்படவுள்ளது.

விருப்பு வாக்குகளின் விபரங்கள் போட்டியிட்ட சகல கட்சிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. விருப்புவாக்குகளின் அடிப்படையில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு கட்சிகளின் தலைமைகளுக்கு அறிவிக்கப்படும். சபை முதல்வர் பிரதி முதல்வர், தலைவர், உபதலைவர் ஆகியோரை இதன் மூலம் தெரிவு செய்யக் கூடியதாக இருக்கும்.

### மீண்டும் இயக்கம்

ரிவிரச இராணுவ நடவடிக்கையின் போது மோசமாக சேதமடைந்த கோப்பாய் வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு இயங்க ஆரம்பித்துள்ளது. வைத்தியசாலை அபிவிருந்திச்சபை 10 கட்டில் மெத்தைகளை கொடுத்துள்ளது. கோப்பாய் பிரதேச செயலரும் இரண்டரை லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார். (ம-1)

### பாதைகள் மூடப்படாது

இலங்கையின் சுதந்திர தின பொன் விழா கொண்டாட்டங்களின்போது கொழும்பில் எந்தப் பாதையும் மூடப்படமாட்டாது. மூன்று பாதைகள் மாத்திரம் ஒரு வழிப் பாதையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு போக்குவரத்துப் பிரிவுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.


'சூரியகாந்தி' உதவி ஆசிரியர்களாக பணி செய்ய விரும்புவோர் நேரில் வரவும்

முன் அனுபவம், ஆங்கில அறிவு, மொழிபெயர்க்கும் ஆற்றல், எழுத்தாற்றல்

என்பன கவனத்தில் எடுக்கப்படும்.

சூரிய காந்தி

68/1, ராசாவின் தோட்டம் வீதி,
யாழப்பாணம்.



## புலமைப் பரிசில் 1998

பயிற்சி பரீட்சை ஞாயிறு தோறும் நாட்டில் உள்ள 7 மாவட்டங்களில் நடைபெறுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு

பொன்ட், யாழ் நகர்



விற்பனையாகின்றது

## பிறைட் புக்ஸ்

நாமும் சுற்றாடலும் (திருத்திய பதிப்பு) ஆண்டு 1 முதல் ஆண்டு 5வரை
நாமும் சுற்றாடலும் செயல் நூல் ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரை
மொழி விருத்தி - செயல் நூல் ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரை
கணிதம் ஆண்டு 2 முதல் ஆண்டு 5 வரை
புதிய பாஷைப் பயிற்சி விளக்கம் ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரை

யாழ்ப்பாணத்தில் எல்லாப்புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

பிறைட் புக்சென்ரர் (பிரைவேட் லிமிட்)
த. பெ. இல. - 162, கொழும்பு.

# சூரியகாந்தி

## வணக்கம்

அன்புள்ள வாசகர்களுக்கு,

வணக்கம், தமிழ்ப் பத்திரிகை உலகில் ''சூரிய காந்தி'' ஒரு புது வரவு.

மக்கள் அனைவருக்கும் பயன் படக்கூடிய முறையில் ஒரு நாளிதழை வெளியிடவேண்டும் என்ற ஆசையின் விளைவு தான் ''சூரிய காந்தி''.

நாளிதழ் ஒன்றை தொடங்கி நடத்த மிகப் பெரிய மூலதனம் வேண்டும். செய்திகளை உடனுக்குடன் சேகரிக்கவும் உடனடியாக மக்களுக்குக் கொண்டு செல்லவும் நவீன தொழில் நுட்ப வசதிகள் வேண்டும். பத்திரிகையை தரமாக நடத்திச் செல்ல நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்ட நல்ல பத்திரிகையாளர் வேண்டும். விற்பனை மூலமும் விளம்பரம் மூலமும் நல்ல வருவாய் வரவேண்டும். இத்தனையும் இருந்தால்தான் ஒரு தினசரிப் பத்திரிகையை வெற்றிகரமாக நடத்த முடியும்.

இன்று யாழ்ப்பாணம் உள்ள சூழ்நிலையில் ஒரு தினசரிப் பத்திரிகையை இங்கு தொடங்கி நடத்த நினைப்பது அவ்வளவு புத்திசாலித்தனமான காரியமல்ல என்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும்.

ஆனால் ஆரோக்கியமான ஒரு நல்ல பத்திரிகை இன்றைய மிக மிக அவசரத் தேவை.

நாம் குடிக்கும் நீர் எவ்வளவு சுத்தமானதாக இருக்க வேண்டுமோ அதே அளவு சுத்தமாக நாம் படிக்கும் பத்திரிகைகளும் இருக்க வேண்டும். அசுத்த நீரை அருந்தினால் எப்படி நமது ஆரோக்கியம் கெட்டு விடுமோ அதே மாதிரித்தான் நாம் வாசிக்கும் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் ஆரோக்கியமானவையாக இல்லாவிட்டால் நமது மனத்தைக் கெடுப்பதோடு நமது வாழ்கையையும் நாசமாக்கி விடும்.

பத்திரிகைத் தொழிலுக்கும், மற்றைய தொழில்களுக்கும் பெருத்த வேறுபாடு உண்டு.

பத்திரிகை ஒரு தனியார் நிறுவனமாக இருந்தபோதிலும் அது ஒரு பொதுச் சொத்து.

பொது நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளைப் பிரசுரிப்பது, பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்களின் கருத்துக்களை மக்கள் மன்றத்துக்கு எடுத்துச் செல்வது, பொது வாழ்வின் சீலத்தை விமர்சிப்பது, பொதுப் பிரச்சினைகளில் மக்களின் கவனத்தைத் திருப்புவது என்று இப்படியாக பொதுமக்களின் வாழ்வோடு கலந்த ஒன்றாகத்தான் ஒரு பத்திரிகை இருக்க முடியும். எனவேதான் ''பத்திரிகா தர்மம் முக்கியம்'' என்ற கருத்து வருகிறது.

பத்திரிகை என்பது பணம் பண்ணுவதற்கான ஒரு சாதனம் அல்ல.

மக்களுக்குப் பிடித்தமானதைத் தருகிறோம் என்று சொல்லிக் கொண்டு பத்திரிகைகளின் தரம் நாளுக்கு நாள் தாழ்ந்து கொண்டு போவதைத்தான் தினம் தினம் காணக் கூடியதாக இருக்கிறது.

காலம் விரைந்து மாறிக் கெண்டே வருகிறது. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சமூகத்தில் எத்தனையோ மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே வருகின்றன. விஞ்ஞான வளர்ச்சியினால் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் பிரமிக்க வைக்கின்றன. அதே நேரத்தில் சமுதாயத்திலிருந்து மெல்ல மெல்ல மனிதத்தன்மை என்பது மறைந்து கொண்டு வருகின்றதோ என்ற பயமும் ஏற்படுகிறது.

மாறிக் கொண்டிருக்கும் இந்த உலகத்தில் நமது நிலை மிகவும் கேவலமாக உள்ளது. நிச்சயமற்ற எதிர்காலம் எல்லோரது உற்சாக நரம்புகளையும் முறித்து வாழ்க்கையை உப்புச் சப்பற்றதாக ஆக்கி உருக்குலைத்துக் கொண்டிருக்கிறது.

இரவிலே வீட்டைவிட்டு வெளியே செல்ல முடியாத நிலை.

பகலில் எங்காவது செல்ல வேண்டுமானால் முழத்துக்கொரு ராணுவ காவல் நிலையத்தைக் கண்டு முகம் சுருங்க வேண்டிய நிலை. ஊர்விட்டு ஊர்போய் தங்க வேண்டுமானால் ராணுவத்திற்குச் சொல்ல வேண்டிய நிலை. கல்வித் துறையில் அசமந்த நிலை. அரசாங்க திணைக்களங்கள் ஏதோ ஒப்புக்கு ஆமை வேகத்தில் இயங்கும் நிலை.

ஏன் இந்த அவலம்?

பத்திரிகைகளுக்கு ஒரு சமூகப் பொறுப்பு உண்டு. அந்தப் பொறுப்பை உணர்ந்து பணி செய்வதே ''சூரிய காந்தி''யின கடமையாக இருக்கும்.

இந்த மண் எங்கள் சொந்த மண். இந்த மண்ணில் ஆழமாக வேரோடியிருக்கும் அசைக்க முடியாத லட்சியங்கள் என்ற செடியில் மலர்ந்த புத்தம் புது மலர்தான் 'சூரிய காந்தி'.

முதலில் ''சூரிய காந்தி''யை ஒரு வார சஞ்சியாக வெளியிடுவது என்றுதான் திட்டம் வகுத்தோம், ஆனால் எங்களது நோக்கத்தை எப்படியோ தெரிந்து கொண்ட ஸ்ரீமான் பொதுஜனம் எங்களுக்கு அமோக உற்சாகம் தந்து எங்களது திட்டத்தையே மாற்றி அமைத்து விட்டார்.

ஸ்ரீமான் பொதுஜனம் பாய்ச்சிய அன்பு நீரும், இட்ட உற்சாக உரமும், காட்டிய அபரிமிதமான அக்கறையும் ''சூரியகாந்தி'' நாளிதழாக மலரக் காரணமாகி விட்டன.

மகிழ்ச்சி நிறைந்த இந்த நேரத்தில் ஸ்ரீமான் பொது ஜனத்திற்கு எங்கள் உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். என்றும் அவர் தொண்டனாகச் செயற்படுவோம் என உறுதிகூறுகிறோம்.

- ஆசிரியர்.

## உப்பு வெளி முகாமில் தரமற்ற மதிய உணவு

யாழ்ப்பாணம் வருவதற்காக திருகோணமலை உப்பு வெளி அகதி முகாமில் தங்க வைக்கப்படும். யாழ்ப்பாண அகதி மக்களுக்கு அரசினால் நாளாந்தம் வழங்கப்பட்டு வரும் மதிய உணவு தரமற்ற நிலையில் வழங்கப்படுவதாக திருகோணமலை உப்புவெளி அகதிமுகாமில் சில காலம் தங்கி அண்மையில் யாழ்ப்பாணம் குருநகர் வந்துள்ள அகதிகள் தெரிவித்தனர்.

மதிய உணவில் ஊற்றப்படும் கறியில் உள்ள மீன் பழுதடைந்த நிலையிலேயே வழங்கப்படுவதாகவும், இதனை உண்ணாமலேயே குப்பைக் கூடையில் அகதிகள் வீசுவதாகவும் இவர் தெரிவித்ததுடன் இது தொடர்பாக அகதி முகாமை நிர்வகிக்கும் அரச அதிகாரிகளிடம் தெரிவித்தால் இனிமேல் இப்படி நடவாது என தெரிவிப்பார்கள். ஆனால் எதுவித நடவடிக்கையும் எடுபடாமல் மீண்டும் பழுதான உணவே வழங்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்; (நி - 1)

## ரூபாவின் ,பெறுமதி வீழ்ச்சி எவ்வளவு?

இலங்கை ரூபாவின் பெறுமதி 1997 ஆம் ஆண்டில் 8.7 வீதத்தால் வீழ்ச்சி அடைந்திருக்கிறது. 1998ஆம் ஆண்டில் இதன் பெறுமதி மேற்குறித்த வீதத்தை காட்டிலும் அதிகமாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஏற்பட்ட பணப் பெறுமதி வீழ்ச்சியைத் தொடர்ந்து இலங்கை நாணயத்தின் பெறுமதியைக் குறைக்க வேண்டும் என்ற குரல் சில வட்டாரங்களில் எழுந்தது.

சென்ற ஆண்டில் முதல் ஒன்பது மாதங்களில் படிப்படியாக பெறுமதி குறைந்து கொண்டு வந்த இலங்கை ரூபாய் அமெரிக்க டொலருக்கு ரூபா 58/- என்ற அளவில் ஒன்பது மாத முடிவில் இருந்தது. ஆனால் சென்ற ஆண்டின் கடைசி மூன்று மாதங்களிலும் தொடர்ந்து வீழ்ச்சிகண்டு அமெரிக்க டொலருக்கு ரூபா 61.60 என்ற நிலையை வருட முடிவில் அடைந்தது.

1998 ஆம் ஆண்டில் பெறுமதி வீழ்ச்சி 10 - 12 வீதமாக இருக்கலாம் என்று பொருளியல் நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள்.

## கட்டுரைப் போட்டி

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே அடுத்த மாதம் 21 ஆம் திகதி கட்டுரைப் போட்டிகள் நடாத்தப் படவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் மார்ச்சிற்கு முன்னர் தமது பாடசாலை அதிபரூடாக விண்ணப்பிக்க வேண்டுமென்று, கரவெட்டி கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (கி - 1)

## தம்பசிட்டியில் திருடர் தொல்லை

வடமராட்சிப் பகுதியிலுள்ள தம்பசிட்டியில், ஆட்களில்லாத வீடுகளில், ஓடு பிரித்து உட்புகும் திருடர்கள் அவ்வீடுகளிலிருந்து பெறுமதி மிக்க பொருட்களை திருடிச் செல்கின்றார்கள்.

கடந்த சில தினங்களுக்கு முன்னரும், இப்பகுதியிலுள்ள வர்த்தகரின் வீட்டில் பெறுமதி மிக்க வீட்டுப்பாவனைப் பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளது.

வீட்டின் பின்புறம் வெட்டிய வேலிகளைப் பயன் படுத்தியே திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுகின்றார்கள். (கி - 1)

## ஏ. ஆர். வி தட்டுப்பாடு

யாழ். போதனா வைத்தியசாலையில் விசர் நாய்க்கடிக்கான ஏற்பூசித் தடுப்பு மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. கடந்த நான்கு நாட்களாக இத்தட்டுப்பாடு காணப்படுகிறது.

## சி. பி. ஐ இயக்குனராக டி. ஆர். கார்த்திகேயன்

இந்திய மத்திய புலனாய்வுக் கழகம் (சி. பி. ஐ) இன் புதிய இயக்குணராக டி.ஆர் கார்த்திகேயன் பதவி ஏற்றுள்ளார். முன்னைய இயக்குனர் ஆர். கே. சர்மாவின் பதவிக்காலம் நேற்று முன்தினம் முடிவடைந்ததையடுத்து கார்த்திகேயன் புதிய இயக்குனிராகப் பதவி ஏற்றுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கார்த்திகேயன் சி. பி. ஐ அதிகாரியாக இருந்த சமயம் விசேட புலன் விசாரனைக் குழுவின் தலைவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாக். கூலிப்படைகள் இந்தியாவிற்குள் ஊடுருவல்

பாகிஸ்தான் கூலிப்படைகள் இந்தியாவிற்குள் அனுப்ப திட்டம் வகுக்கிறது என இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

தேர்தலைக் குழப்புவதற்காகப் பாகிஸ்தான் திட்டமிடுவதாகவும் இதற்காகக் கூலிப்படைகளை இந்தியாவிற்குள் அனுப்ப முயற்சி செய்வதாகவும் இந்திய உள்துறை அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு கூலிப்படைகளுக்கு பெரும் தொகையான பணம் கொடுத்து குழப்ப வேலைகளில் ஈடுபடுவதாக இந்திய அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## கண்டி அனுமதிப்பத்திரம் கொழும்பில் செல்லுபடி

கண்டியில் இடம்பெறவிருந்த சுதந்திர தின பொன் விழா நிகழ்ச்சிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டுக்கள் மற்றும் வாகன அனுமதிச் சீட்டுக்கள் என்பன கொழும்பு கோட்டை பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்கு எதிராக நடைபெறும் பொன்விழாக் கொண்டாட்டங்களில் செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கண்டியில் நடைபெறவிருந்த சுதந்திர தின வைபவங்கள் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற தலதா மாளிகை லொறி குண்டுவெடிப்பை தொடர்ந்து கொழும்பிற்கு மாற்றப் பட்டுள்ளமை தெரிந்ததே.

## இளமைப் பெண்கள் மத்தியில் கிரிக்கெட் வீரர்களுக்கு ஒரு கவர்ச்சி நிறைந்த மதிப்பும் உண்டாகியிருக்கிறது

# பலரது கவனத்தையும்

கிரிக்கெட் விளையாட்டுக்கு சமீப காலமாக உலகின் பல பாகங்களிலும் ஏகப்பட்ட 'மவுசு' ஏற்பட்டிருக்கிறது. என்றுமே இல்லாத உற்சாகம் இன்று கிரிக்கெட் உலகில் கரைபுரண்டு ஓடுகிறது.

முன்னர் இல்லாத அளவுக்கு கிரிக்கெட் வேகமாகவும் விறுவிறுப்பாகவும் பரவுவதற்கு காரணம் என்ன?

பல அரசாங்கங்களின் பொருளாதாரக் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்தான்!

உலகம் முழுவதிலுமே 'தாராளமயமாக்கல்', 'திறந்த பொருளாதாரம்', 'கட்டுப்பாடில்லாத வர்த்தகம்', 'லாபநோக்கமான உற்பத்தி என்பன பொருளாதார நிபுணர்களால் ஜபிக்கப்படும் மந்திரங்கள் ஆகிவிட்டன.

இப்போது தொழில் வளர்ச்சியும் வர்த்தகப் போட்டியும் அதிகரித்து வருகின்றன. எல்லைகள் இல்லாத வர்த்தகம் புதிய சந்தைகளை தேடுகிறது. போட்டியில் ஈடுபடும் வர்த்தக நிறுவனங்கள் தங்கள் வளர்ச்சிக்கான விளம்பரத்துக்காக நிறையப் பணத்தைச் செலவு செய்கின்றன.

### பண வரவு வளர்ச்சிக்கு காரணம்

வாடிக்கையாளரைத் தக்க வைத்துக் கொள்வதற்கும், புதிய உற்பத்திகளை நுகர்வோருக்கு பழக்கப்படுத்துவதற்கும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் அவசியம் ஆகின்றன. விளம்பரம் இல்லாவிட்டால் வியாபாரம் இல்லை. வர்த்தக நிறுவனங்கள் விளம்பரத்துக்காக கோடி கோடியாகச் செலவுசெய்யும் பணம கிரிக்கெட் உலகத்துள் வெள்ளமாய் வந்து பாய்கிறது.

இந்தப் 'பணவரவு'தான் கிரிக்கெட் விளையாட்டின் புதிய வளர்ச்சிக்கும் கவர்ச்சிக்கும் காரணம்.

### இலங்கை அணி

அடுத்தடுத்து பல ஒருநாள் போட்டித் தொடர்களில் பிரமிக்கத்தக்க முறையில் வெற்றி பெற்று சாம்பியன்கள் ஆன காரணத்தால் 'இலங்கை அணி'க்கு ஒரு தனியான கௌரவமும் நல்ல புகழும் கிடைத்து இருக்கின்றன.

இலங்கை அணியின் அணுகுமுறை புதிதானது, ஆட்டம் புத்திசாலித்தனமானது, இதனால் உலகம் முழுவதிலுமே இலங்கை அணிக்கு அபிமானிகள் பலர் உருவாகியுள்ளனர்.

சனத் ஜெயசூரியா, அர்ச்சுனா ரணதுங்கா, முத்தையா முரளிதரன், அரவிந் சில்வா, மார்வன் அத்தபத்து போன்று பலர் மிகக் குறுகிய காலத்தில் சர்வதேசப் 'புகழ்பெற்ற கவர்ச்சி நட்சத்திரங்கள் ஆகிவிட்டனர்.

### வீட்டுக்குள்ளேயே கிரிக்கெட்

கிரிக்கெட் விளையாட்டின் வளர்ச்சிக்கும் புகழுக்கும் இன்னொரு காரணம் தொலைத்தொடர்புச் சாதனங்களில் ஏற்பட்டுள்ள வியக்கத்தக்க மாற்றங்கள்! தொலைத்தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சிதான் கிரிக்கெட் ஆட்டம் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளதற்கு முக்கியமான காரணம்.

முன்னர் ஆடுகளத்துக்குச் சென்றுதான் கிரிக்கெட் பார்க்க முடியும். அதற்கு கிரிக்கெற் வேண்டும், நேரம் வசதிப்பட வேண்டும், கூட்டத்தில் நசிபடவும் வேண்டும், வெய்யிலில் காயவும் வேண்டும்.

இத்தகைய அவஸ்தைகளுக்கு ஆட்பட விரும்பாதவர்கள் நல்ல கிரிக்கெட் போட்டியை பார்க்க முடியாது.

இப்போது வீட்டுக்குள்ளேயே கிரிக்கெட் வந்துவிட்டது. அலுவலக வேலை நேரத்திலும் கிரிக்கெட் பார்க்கிற காலமாகிவிட்டது. உபயம்: தொலைக்காட்சிப் பெட்டிகள்.

கொழும்பிலும் சென்னையிலும் மட்டுமல்ல உலகத்தின் எந்தப் பகுதியில் நடைபெறும் போட்டியையும் இங்கிருந்தே பார்க்கமுடிகிறது.

இரவிலும் ஒளி வெள்ளத்தில் கிரிக்கெட் நடக்கிறது. மிகச் சௌகரியமாக வீட்டிலிருந்து இரவு உணவை குடும்பத்தினருடன் சேர்ந்து சாப்பிட்டபடியே கிரிக்கெட் போட்டிகளைப் பார்க்க முடிகிறது.

அன்றைக்கு பார்க்க வசதி இல்லாதவர்களுக்கு இருக்கவே இருக்கிறது வீடியோ! பதிவு செய்து வைத்து வேண்டிய நேரத்தில் பார்த்துக்கொள்ளலாம்! நல்ல கிரிக்கெட் பந்தயங்களின் வீடியோ நாடாக்கள் வாடகைக்கும் கிடைக்கின்றன. தேவை ஏற்படும் போது நடந்த முடிந்த மாட்சையும் மிக நுணுக்கமாகப் பார்த்து ரசிக்க முடிகிறது.

### தொலைத்தொடர்பு சாதனங்கள் கலாச்சாரத்தை மாற்றுகின்றன

தொலைக்காட்சியில் கிரிக்கெட் பந்தயங்களைப் பார்க்கும்போது இன்னொரு வசதியும் இருக்கிறது. ஒருவர் பவுண்டரி அடித்தாலோ, சிக்ஸ்ஸர் அடித்தாலோ, காட்ச் பிடித்தாலோ, விக்கெட்டை இழந்தாலோ அதையெல்லாம் 'குளோஸ் அப்'பில் காட்டுகிறார்கள். சில நல்லசொட்ஸ் அல்லது அருமையான பந்து வீச்சு - குளோஸ் அப்பில் பார்த்து ரசிக்க முடிகிறது. கிரிக்கெட்டின் நுணுக்கங்கள் சாதாரண மக்களுக்கும் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் விளக்கப்படுகிறது.

தொலைத்தொடர்புச் சாதனங்களில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி எவ்வாறு விளையாட்டுத்துறையை மாற்றுகிறது, நமது கலாச்சாரத்தையும் மாற்றுகிறது என்பதற்கு கிரிக்கெட் உதாரணம் ஒன்று மட்டுமே போதும்.

இப்போது நேர்முக வர்ணனைகள் பல்வேறு மொழிகளில் வருகின்றன. போட்டி போட்டுக் கொண்டு எல்லாப் பத்திரிகைகளுமே கிரிக்கெட் செய்திகளை நிறையப் படங்களுடன் தருகின்றன. விமரிசனங்களும் வருகின்றன.

மொத்தத்தில் -

பலரது கவனத்தையும் கவரும் விளையாட்டாக கிரிக்கெட் மாறிவிட்டது.

### பெண்களைக் கவருகிறது

நிறையப் பெண்களையும் கவர்ந்து இழுக்கிறது கிரிக்கெட்! தொலைக்காட்சியில் பார்த்துப் பார்த்து ஆட்டத்தின் நெளிவு சுளிவுகளையும் தெரிந்தவர்களாக பல பெண்கள் ஆகிவிட்டனர்! 'மீடியா'வின் உபயத்தால் கிரிக்கெட் நாயகர்களின் 'செக்ஸ்' கவர்ச்சியும் அதிகரித்திருக்கிறது.

நவீனமும் நாகரிகமும் நிறைந்த இளமைப் பெண்களின் மத்தியில் கிரிக்கெட் வீரர்களுக்கு ஒரு கவர்ச்சி நிறைந்த விசேஷ மதிப்பு இப்போது உண்டாகியிருக்கிறது.

சூப்பர் ஸ்டார்' என்றும் 'கனவுக்கன்னி' என்றும் பட்டம் சூட்டப்பெற்று உயரத்தில் இருக்கும் சினிமா நட்சத்திரங்களுக்குக் கிடைக்கும் புகழையும் பணத்தையும் விடக் கூடுதலாக இப்போது கிரிக்கெட் ஸ்டார்களுக்குக் கிடைக்கிறது.

### நிறையப் பணம் வருகிறது

அர்ச்சுனா ரணதுங்கா, அரவிந்த சில்வா, சனத் ஜெயசூரியா, சச்சின் டெண்டுல்கர், வினோத்காம்பிளி கபில்தேவ், ரவிசாஸ்திரி, அசாருதீன் இவர்கள் எல்லாருமே இப்போது மிகப் பெரிய கோடீஸ்வரர்கள்.

பியர் உற்பத்தி நிறுவனம், சிகரெட் உற்பத்தி நிறுவனம், கொகோ கோலா, பெப்ஸி, சிங்கர், பென்சன் அன் ஹெட்ஜெஸ் போன்ற நிறுவனங்கள், வங்கிகள், பனியன் தயாரிப்பாளர்கள், பிளேட் தயாரிப்பாளர்கள், பால் உணவு உற்பத்தியாளர் இத்யாதி இத்யாதி எத்தனையோ வர்த்தக நிறுவனங்கள் கிரிக்கெட் வீரர்களை வைத்து போஸ்டர் கலண்டர் விளம்பரங்களும் தொலைக்காட்சி விளம்பரங்களும் செய்கின்றன.

இந்த விளம்பரங்களின் மூலம் கிரிக்கெட் வீரர்களுக்கு எக்கச்சக்கமான பணம் கிடைக்கிறது.

பெப்ஸி நிறுவனம் ராகுல் திராவிட்டையும் அசாருதீனையும் தலா இரண்டு கோடி ரூபாய் கொடுத்து தங்களது விளம்பரத்துக்கு ஒப்பந்தம் செய்திருக்கிறது.

கொகோ கோலா நிறுவனம் சச்சின் டெண்டுல்கருக்கு மூன்று கோடி ரூபாய் கொடுத்து ஒப்பந்தம் செய்திருக்கிறது. சௌரவ் கங்குலியும் இரண்டு கோடி ரூபாவுக்கு ஒப்பந்தம் ஆகியிருக்கிறார்.

பார்த்தீர்களா ஒப்பந்தங்கள் எல்லாம் கோடிக் கணக்கில்!

ஜடேஜா, சித்து ஆகியோரின் காட்டிலும் நல்ல மழை பெய்கிறது!

நமது ''அதிரடி'' ஜயசூரியாவுக்கும் எக்கச்சக்கமான ''டிமான்ட்''!

இதைவிட ஒவ்வொரு மாச்சின் போதும் நிறையப் பணம் கிடைக்கிறது. வெற்றியானாலும் பணம் கிடைக்கிறது, தோல்வியானாலும் பணம் கிடைக்கிறது. 'ஆட்ட நாயகன்', 'ஆட்டத்தொடர் நாயகன்' போன்ற கௌரவங்கள் கிடைக்கின்ற நேரத்தில் நிறையப் பணத்தோடு புகழும் பெரிதாகக் கிடைக்கிறது.

பலருக்கு அவர்களது கிரிக்கெட் திறமைக்காகவே தனியார் நிறுவன்ங்களில் நிறையச் சம்பளத்துடன் கௌரவமான நல்ல வேலையும் கிடைக்கிறது.

பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற நேரத்திலேயே கிரிக்கெட் விளையாட்டில் திறமைசாலிகளை இனங்கண்டு பல வழிகளிலும் ஊக்குவிப்பதும், அவர்களுக்கு பல வசதிகள் செய்து கொடுப்பதும் இப்போது வழக்கமாகி வருகிறது.

### பயிற்சிப் பள்ளிகள்

சென்னை, பம்பாய், டெல்லி, ஹைதரபாத் போன்ற பெரிய நகரங்களில் கிரிக்கெட் பயிற்சிப் பள்ளி, ''கிரிக்கெட்அக்கடெமி'' என்ற பெயர்களில், பல தனியார் நிலையங்கள் இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக துவக்கப்பட்டு உள்ளன.

பணக்காரரின் பிள்ளைகளும் பல பெரிய மனிதர்களின் பிள்ளைகளும் நிறையப் பணம் கொடுத்து இப் பள்ளிகளில் பயிற்சி பெறுகிறார்கள்.

கிரிக்கெட்டில் எல்லா அம்சங்களையும் உள்ளடக்காமல், ஒரே ஒரு அம்சத்தில் மட்டும் பயிற்சி அளிக்கின்ற நிலையங்களும் உண்டு. மருத்துவத் துறையில் டாக்டருக்கு பயிற்சி அளித்து ஸ்பெஷலிஸ்ட்' ஆக்குவது போல!

உதாரணமாக சென்னையில் உள்ள ஒரு நிலையம் ''வேகப் பந்து வீச்சாளர்''களை உருவாக்குவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செய்யப்படுகிறது.

இலங்கை வீரர்களான சமிந்தா வாஸ், புஸ்பகுமார, ரஜிவா சில்வா விக்கிரமசிங்கா ஆகியோர் இந்த நிலையத்தில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள்!

ஒருகாலத்தில் 'கிரிக்கெட்' என்பது கனவான்களின் விளையாட்டாகவே கருதப்பட்டது. இப்போது



நிலைமை அப்படி அல்ல, மிக மிக சாதாரண நியையில் உள்ளவர்களும் கிரிக்கெட் உலகில் பிரவேசித்து மின்னும் தாரகைகளாக மாறி பளிச்சிடுகிறார்கள்.

சனத் ஜயசூரியாகூட இப்படி வந்தவர்தான்!

### யாழ்ப்பாணத்திலும் ஒரு பாரம்பரியம் உண்டு.

யாழ்ப்பாணத்திலும் பெரிய அளவில் என்று சொல்ல முடியாவிட்டாலும் ஒரு அளவுக்கு நல்ல பாரரபரியம் வெகு நாளாகவே இருந்து வருகிறது.

உலகப் புகழ் பெறக்கூடிய அளவுக்கு திறமை மிகுந்த கிரிக்கெட் வீரர்கள் இங்கேயும் உருவாக வேண்டும்.

சென் ஜோன்ஸ் கல்லூரி, சென்ரல் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, ஹாட்லி கல்லூரி என்பன இந்த விளையாட்டை ஊக்குவிப்தில் நல்ல ஆர்வம் காட்டி வந்துள்ளன.

அது தவிர இங்கே சில நல்ல விளையாட்டுக் கழகங்களும் இருந்தன.

இப்போது கிரிக்கெட்டில் ஆர்வம் காட்டி வரும் கழகங்களைக் குறிப்பிட வேண்டுமானால்-

ஜோனியன்ஸ், சென்ட்ரலைட்ஸ், பட்ரீசியன்ஸ், கம்பஸ், மானிப்பாய் பரிஷ், ஜொலி ஸ்ராஸ், கிராஸ் ஹொப்பேர்ஸ், மல்லாகம் ஆர்டி எஸ், கொக்குவில் சிசிசி போன்ற கழகங்களை சிறப்பாக குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

### புதிய யாழ்ப்பாண அணி

யாழ்ப்பாண கிரிக்கெட் சங்கத்தினர் புதிய கிரிக்கெட் அணியைத் தெரிவு செய்துள்ளனர். தயாளன், சுதேசன், சுதேஸ்குமார், நிஷாந்தன், சுபாஸ்கரன், அருணோதயன், அரசரட்ணம், கௌரிபாகன், கார்த்திக், பாஸ்கரன், சார்ஜஹான், அரவிந்தன், சிவராஜா, சஞ்சீவ், சசிகரன், சபானந்த், சீராளன், ஜெகஜீவன், வரப்பிரதன், ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ் மாவட்ட கிரிக்கெட் அணியில் இடம் பெற்று உள்ளனர்.

இந்த அணியில் உள்ளவர்களைத் தவிர இன்னும் பல திறமையான விளையாட்டு வீரர்கள் இருக்கிறார்கள். மேலும் பயிற்சி அளிப்பதன் மூலமும், வசதிகளை செய்து கொடுப்பதன் மூலமும், பாராட்டும் உற்சாகமும் தருவதன் மூலம் இன்னும் பல வீரர்களை உருவாக்க முடியும்.

யாழ்ப்பாண அணி கொழும்பு, காலி, மாத்

# கவரும் கிரிக்கெட்

தறை ஆகிய இடங்களில் அண்மையில் சில பந்தயங்களில் விளையாடியிருக்கிறது.

பிரமிக்கத்தக்க வெற்றி எதையும் பெறாவிட்டாலும் சோடை போகாத முறையில் மிக நன்றாகவே இந்த அணியினர் விளையாடியிருக்கிறார்கள்.

இங்குள்ள சூழ்நிலையையும் வசதிகளையும் வைத்துப் பார்க்கும்போது இவர்களது ஆட்டம் மிக மிக மெச்சத்தக்கது என்பதில் சந்தேகமே இல்லை.

விரைவிலேயே பல்கலைக்கழக மைதானம், சென்ட்ரல் கல்லூரி மைதானம், சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானம் ஆகிய இடங்களில் ''ரேஃவ் விக்கெட்'' அமைய இருக்கிறது. இது சரித்திரத்தில் முதல்முறை.

இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

''ரேஃவ் விக்கெட்''டில் பயிற்சி பெறும் நமது வீரர்கள் பல இடங்களுக்கும் சென்று சாதனைகள் நாட்டப்போவது நிச்சயம்!

## ஆர்வம் அதிகரிக்கிறது

இங்குள்ள இளைஞர்கள் மத்தியிலும், மாணவர் மத்தியிலும், சின்னஞ் சிறு சிறுவர்கள் மத்தியிலும் கிரிக்கெட் விளையாட்டில் நல்ல ஆர்வம் ஏற்பட்டு இருக்கிறது.

'கிரிக்கெட்' வீரர்களின் வண்ணப் படங்களும் ஸ்ரிக்கர்படங்களும் கடைகளில் நன்கு விற்பனை ஆகின்றன.

பல பெற்றோர் தங்கள் பிள்ளைகளை கடைக்கு அழைத்துச் சென்று கிரிக்கெட் பந்தும் மட்டையும் வாங்கிக் கொடுக்கிறார்கள்.

எனக்கு ஒரு தாயைத் தெரியும், அரசாங்க அலுவலகத்திலோ அல்லது வேறு எங்கோ உத்தியோகம் பார்ப்பவர் அல்ல. சாதாரண குடும்பத் தலைவிதான். ஒவ்வொரு கிழமையும் ''ஸ்போர்ட் ஸ்ரார்'' சஞ்சிகை எப்போது வருமென்று ஓடியோடி ஒவ்வொரு கடையாகப் பார்த்து, அது வந்த உடனேயே தனது சின்ன மகனுக்கு வாங்கிக் கொடுக்கிறார். மகனும் அவற்றை ஆர்வத்தோடு பயன்படுத்துகிறார். கிரிக்கெட்டில் ஆர்வம் ஏற்படுவதோடு ஆங்கில மொழிப் பயிற்சிக்கும் இது உதவும்'' என்கிறார் அந்தத் தாய் புத்திசாலித்தாய்.

## சென் ஜோன்ஸில் படிக்கும் ''பொடிசு''கள்

சென் ஜோன்ஸ் கல்லூரியில், சின்ன வகுப்புக்களில் படிக்கும் சில 'பொடிசு'கள் சேர்ந்து 'கிளப்' மாதிரி ஒரு அமைப்பை வைத்திருக்கிறார்கள். எல்லாரும் காசு போட்டு, நல்ல பந்து நல்ல துடுப்பு எங்கே மலிவாகக் கிடைக்கிறது என்று தேடி, 'பேரம்' பேசி வாங்குகிறார்கள். 'பேரம்' பேசுவதில் அசகாய சூரர்கள்! ரசிக்கத்தக்க குறும்பும் உண்டு! அந்த மாணவர்கள் படிப்பிலும் படு சுட்டியாக இருக்கிறார்கள்.

படிப்பு, கிரிக்கெட் இரண்டிலுமே கெட்டித்தனம் காட்ட வேண்டும் என்ற துடிப்பு இவர்களிடம் நிறையவே இருக்கிறது. பெற்றோரின் ஊக்குவிப்பும் கல்லூரியின் நல்ல வழிகாட்டலும்தான் இதற்குக் காரணமாக இருக்க வேண்டும். நிச்சயம் இந்த மாணவர்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு.

**- மீரா -**

## காரணம் தெரியவில்லை

''டொனால்ட் கணேஷ்குமார் ''வெற்றிக் கிண்ண சுற்றுப்போட்டி சென்ற ஆண்டு முக்கால் கட்டம் தாண்டியது. இறுதிப் போட்டிகள் எந்த நேரத்திலும் நடை பெறலாம் என்ற நிலை இருந்தது. இன்னமும் அதன் இறுதிப் போட்டிகள் நடைபெறவில்லை. ஏன் நடைபெறவில்லை என்பதற்கான காரணமும் தெரியவில்லை!

எது எப்படியிருந்த போதிலும் சூழ்நிலைகளை வைத்து நோக்கும்போது இந்தப் போட்டிகளை ஏற்பாடு செய்து நடத்திய நிர்வாகத்தினர் எல்லோரது பாராட்டுக்கும் உரியவர்கள்

யாழ்ப்பாணம் கொமர்சியல் வங்கி போன்ற நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் பலர் 'கிரிக்கெட்'டில் விசேஷ அக்கறை காட்டி வருகிறார்கள்.

கொமர்சியல் வங்கி ரஜீவனும், ஹற்றன்நாஷனல் வங்கி லோகதாசும் குறிப்பிடத்தக்கவர்கள்.

யாழ்ப்பாணத்து கிரிக்கெட் பற்றிய செய்திகளும் கட்டுரைகளும் பத்திரிகைகளிலும் நிறைய வர வேணடும். அப்போதுதான் வீரர்களுக்கும், அணிகளுக்கும் நல்ல உற்சாகம் உண்டாகும்.

## கிரிக்கெட் எழுத்தாளர்கள்

முன்னர் 'ரைம்ஸ்' பத்திரிகையின் விளையாட்டுத் துறை நிருபராக விக்ரர் கிருபைராஜ் இருந்தார். இங்கே நடைபெறும் கிரிக்கெட் போட்டி பற்றிய செய்திகளும் விமரிசனங்களும் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளிவரும். ஓரளவுற்கு ரசமாக ஆங்கிலத்தில் எழுதக்கூடிய வல்லமை அவரிடம் இருந்தது. அவரின் மறைவு பெரிய நஷ்டம்.

## 'சுப்பு '' மாதிரி எழுத வேண்டும்

கிரிக்கெட் எழுத்தாளர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது சங்கீத விமர்சகர் ''சுப்புடு'' நினைவு வருகிறது. முன்னர் டெல்லியில் பெரிய உத்தியோகத்தில் இருந்தவர். தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் மிக அருமையாக எழுதக்கூடியவர்.

சில கர்நாடக சங்கீதக் கச்சேரிகளை விட அக்கச்சேரிகளைப் பற்றி ''சுப்புடு'' எழுதும் சங்கீத விமரிசனங்கள் நவரசங்களும் நிறைந்து ஜொலிக்கும். படிக்க மிகச் சுவையாக இருக்கும். 'சுப்புடு' வின் விமரிசனங்களைப் படித்தே கர்நாடக சங்கீதத்தில் ஈடுபாடு கொண்டவர் பலர்.

கர்நாடக சங்கீதம் பற்றி 'சுப்புடு' எழுதுவது போல யாழ்ப்பாணத்திலும் கிரிக்கெட் பற்றி எழுதுவோர் ஒரு சிலராவது தோன்றவேண்டும். அவர்களது கட்டுரைகளும் விமரிசனங்களும் பத்திரிகைகளில் நிறைய வரவேண்டும்.

இங்குள்ள இளைஞர்களை உற்சாகமூட்டி சர்வ தேச தரத்திற்கு நாம் உயர்த்த வேண்டும்.

---

ஒரு விஷயம் கவனித்துப் பார்த்திர்களா? இப்போதெல்லாம் பெரும்பாலான இடங்களில் வண்ணத்துப் பூச்சிகளைக் காண முடிவதில்லை? காரணம் என்ன?

# எங்கே போய்விட்டன? வண்ணத்துப்பூச்சிகள்!

முன்னரெல்லாம் யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் நிறைய வண்ணத்துப் பூச்சிகளை காண முடியும்.

இப்போது சில இடங்களில் வண்ணத்துப் பூச்சிகள் முற்றாகவே இல்லாது போய்விட்டன.

பலப்பல வண்ணங்களில், பலப்பல வடிவங்களில், பலப்பல 'சைஸ்'களில் கூட்டம் கூட்டமாக வண்ணத்துப் பூச்சிகள் கூட்டமாக 'படபட' வென்று சிறகடித்துப் பறப்பதை பார்க்கும் போதே பரம ஆனந்தமாக இருக்கும்.

சில செடிகளில் அவை கூடியிருக்கும் போது ஒரே வர்ணஜால மயமாயிருக்கும்.

அவை மெதுவாக எழுந்து பறப்பதும்' சுற்றிச்சுற்றி வந்து நோட்டம் பார்த்த பின் மெதுவாக வந்து அமர்வதும் பார்க்கப் பார்க்க ரம்மியமான காட்சி!

இந்தப் பூச்சிகளுக்கு என்ன நடந்து விட்டது? எல்லாம் எங்கே போய்விட்டன?

வண்ணத்துப் பூச்சிகளில் எத்தனையோ ஜாதிகள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒரு தனி அழகும் ஒரு தனி அடையாளமும் உண்டு. தனிக் குணமும் உண்டு.

இலங்கையில் மொத்தம் இருநூற்று அறுபது வண்ணத்துப் பூச்சி ஜாதிகளை இனங்கண்டு இருக்கிறார்கள்.

இவற்றில் ஏற்கனவே அறுபது ஜாதி பூச்சிகள் முற்றாகவே அழிந்து போய் விட்டன.

மீதி இருநூறு ஜாதிகளும்கூட விரைவிலேயே அழிந்துவிடும் போல தெரிகிறது.

ஒவ்வொரு ஜாதியிலும் ஆணும் உண்டு; பெண்ணும் உண்டு. ஆண் பூச்சிகளைவிட பெண் பூச்சிகள் சற்று பெரிதாக இருக்கும். மேலோட்டமாக பார்க்கும்போது ஆண் பெண் வித்தியாசம் தெரியாது. ஜனன உறுப்புக்களைப் பார்த்துத்தான் இந்த வித்தியாசத்தை சொல்லமுடியுய்.

சூழல் மிகக் கடுமையாக மாற்றம் அடையும் போதுதான் சில பூச்சிகளின் சில ஜாதிகள் முற்றாகவே அழிந்து போய்விடுகின்றன!

இப்படி ஏற்படும் அழிவுகளால் அந்தப் பிரதேசத்தின் சமநிலையையும் பாதிக்கப்படவே செய்கிறது.

சூழலில் ஏற்படும் மாற்றம் பூச்சிகளை மட்டுமல்லாது மனிதர்களையும் பாதிக்கவே செய்கிறது.

பூச்சிகளின் மறைவிலிருந்து நமது சூழலில் கடுமையான மாற்றம் ஏற்பட்டுளளது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் முன்னர் எத்தனை ஜாதி வண்ணத்துப் பூச்சிகள் இருந்தன? இப்போது எத்தனை இருக்கின்றன?

என்ன காரணத்தினால் பல வண்ணத்துப்பூச்சிகள் காணாமல் போயிருக்கின்றன?

பள்ளிக்கூடத்து உயிரியல் ஆசிரியர்களோ அல்லது பல்கலைக்கழக உயிரியல் மாணவர்களோ இத்துறையில் அக்கறை செலுத்துவார்களேயானால் சில புதிய அபூர்வமான முடிவுகள் கிடைக்க முடியும்.

**- 'சுதர்ஸன்' -**

வெறுமனே ''நோட்''ஸையே போதிக்கின்ற ஆசிரியர்களும், ''நோட்ஸ்'' எழுதுவதையே தொழிலாகக் கொண்ட மாணவர்களும் இத்தகைய வேலைகளிலும் இறங்குவது நல்லது.

இப்படியான வேலைகளில் ஈடுபடும் போது படிப்பு என்பது அச்சாதாரணமான சுவையுள்ளதாக மாறிவிடுவதையும் காண முடியும்.

---

பெரும்பாலான நோய்களுக்கு காரணமே நமது உணவுப் பழக்க வழக்கங்கள்தான்!

# எப்போது சாப்பிடுகிறோம் என்பது முக்கியம்

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பது உண்மைதான்.

நோய் நொடி இல்லாமல் வாழ்வதற்கு நமது உணவுப் பழக்கம் மிக முக்கியம்.

''என்ன சாப்பிடுகிறோம்'' என்பது எவ்வளவு முக்கியமோ அதே அளவு முக்கியம்''எப்போது சாப்பிடுகிறோம்'' என்பதும்!

கண்ட நேரமெல்லர்ம் ஏதோகொறித்துக் கொண்டு இருப்பவர்களின் உடல் கண்டிப்பாகக் கெட்டுத்தான் போகும்! உணவு சமிபாடு ஆகாமல் வயிற்றுள் இருக்கும்போதே மறுபடியும் உணவு உட்கொள்வது நல்லதல்ல! வயிறு முட்ட முட்ட உண்பதும் நல்லதல்ல!

பெரும்பாலான நோய்களுக்குக் காரணமே நமது உணவுப் பழக்கவழக்கங்கள்தான்!

இன்றைய 'அவசர யுக' வாழ்க்கை காரணமாகப் பலர் காலை உணவைத் தவிர்க்கின்றனர்.

இளைஞர் பலர் காலை உணவில் அக்கறை செலுத்துவதில்லை. காரணம் பள்ளிக்கு நேரம் பிந்திவிடும். அல்லது 'ரியூஷ'னுக்கு நேரம் பிந்திவிடும் என்பது!

ஆனால்-

இதுவே பிற்கால உடல் தாக்குதல்களுக்கு அடிப்படையாய் அமைந்து விடுகிறது,

காலை உணவைத் தவிர்ப்பவரே பிற்காலத்தில் பல நோய்களுக்கும் ஆளாகின்றனர்.

ஒருவரின் உடல் காலை உணவை ஏற்றுக்கொள்ள ஏதுவாய் இருப்பதாகவும், அந்த உணவினால் ஏற்படும் சக்தி மாலைவரை பயன்படுகிறது என்றும் ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

நவீன உலகில் மற்றுமோர் குறைபாடும் உள்ளது. இரவு உணவுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இரவு ஒன்பது பத்து மணிக்கு அதிக கலோரி உடைய உணவை உண்டபின், உடனே உறங்கச் செல்லும் பழக்கம் உடையோரும் ஏராளம்.

**- 'சாரங்கன்' -**

இதனால்-

சமிபாடு கெடுவதுடன் உணவே நஞ்சாகி விடுகிறது.

இத்தகைய முறையற்ற பழக்கங்கள் நோயையும் முதுமையையும் கையோடு கொண்டுவந்துவிடும்.

எனவேதான் -

காலையில் அரசனைப் போலவும், மதியம் இளவரசனைப் போலவும், இரவில் கருமியைப் போலவும் உண்ண வேண்டும் என்பர்.

அதிக டென்ஷன், படபடப்பு, கோபம், சிடுசிடுப்பு என்பவற்றுக்கு முறையற்ற உணவுப் பழக்கங்களே முதற்காரணம்!

## நியூ கல்யாணி நகை அகம்

87, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
( வண்ணை சிவன்கோவில் முன்பாக )

22 கரட் தங்க வைர நகைகளை பெற்றிட உத்தரவாதமுள்ள ஒரே ஸ்தாபனம்

நியூ கல்யாணி நகை அகம்

❋ மருந்து வகைகள்
❋ பாடசாலை உபகரணங்கள்
❋ இந்திய சஞ்சிகைகள்
❋ பத்திரிகைகள்

## நியூ ஸ்ரார்
பார்மஸி புக் சொப்
சித்தங்கேணி.

பல்கட்டுதல், கிளிப் போடுதல்
வைத்தியரின் ஆலோசனைக்கு அமைய
கண்ணாடி வழங்குதல்.

வாழ்க! வளர்க!
## என வாழ்த்துகின்றோம்

யா/நீர்வேலி
சீ. சீ. த. க. பாடசாலையில்
ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பெருமை தேடித்தந்துள்ள மாணவர்கள்:-

1. செல்வன் அருணகிரிநாதன் ஹரீசந்திரன் 135 புள்ளிகள் (கோட்ட மட்டத்தில் 2ம் இடம்)
2. செல்வி ஷம்பிகா இராசரத்தினம் 133 புள்ளிகள் (கோட்ட மட்டத்தில் 4ம் இடம்)
3. செல்வி கின்துசா குகதாசன் 106 புள்ளிகள்
4. செல்வன் சிவலிங்கம் விஜிகரன் 102 புள்ளிகள்
5. செல்வி கார்த்திகா இராசையா 97 புள்ளிகள்

ஆகியோர்களை வாழ்த்திப் பாராட்டுவதுடன், இவர்களை நெறிப்படுத்திய எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/நீர்வேலி சீ. சீ. த. பாடசாலை
நீர்வேலி.

## விண்ணப்பப் படிவம்

வடக்கு, கிழக்கு மாகாண பொதுச் சேவைக்கு விஞ்ஞான / கலை / வர்த்தகப் பட்டதாரி உதவி ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான படிவம் விற்பனையாகிறது. விலை ரூபா 3/- தபாலில் பெறுவதாயின் ரூபா 5/- அனுப்பவும்.

விபரம் 29 - 1 - 98 வீரகேசரி

நாயகபாலன் ஸ்ரோர்ஸ்
மானிப்பாய்.

# அதிகாரிகளினால் அல்லலுறும் ஆசிரியர்கள்

மாசி, 01

இடமாற்றம் கோரி மேல் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்குச் செல்லும் ஆசிரியர்கள் அங்குள்ள உயரதிகாரிகளினால் பந்தாடப் படுகின்றார்கள்.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் சரத் கஹகல்ல விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மேலும் அச் செய்திக் குறிப்பில் - நிரந்தர நியமனம் பெறும் எந்த அரசஊழியரும் வருடாந்த இடமாற்றம் பெறத் தகுதியுடையவர்கள். வட கிழக்கு மாகாணத்திலிருந்து நியாயமான காரணங்களின் அடிப்படையில் 1996ல் மேல் மாகாணத்துக்கு இடமாற்றம் கோரியவர்களில் தகுதியானவர்களை, வட கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு விடுவித்து அரச சேவை ஆணைக்குழு அங்கீகரித்து மேல்மாகாண சபையில் அரச சேவை ஆணைக் குழுவிற்கு அனுப்பிய பின், விடுவிக்கப்பட்ட ஆசிரியர்களின் விபரப் பட்டியல் மேல் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு ஆணைக்குழு மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் தொடர்பாக செல்லும் ஆசிரியர்கள் உயரதிகாரிகளினால் பந்தாடப் படுவதுடன் குறிப்பிட்ட உயரதிகாரிகள் இவ் இடமாற்றங்கள் மூலம் பயங்கரவாதிகள் ஊடுருவுகிறார்கள் என்று காரணம் காட்டி இவர்களது இடமாற்றத்தில் அக்கறையின்றிச் செயற்படுவதுடன் ஆசிரியர்களின் நேரத்தையும் வீணாக்குகின்றார்கள். அப்பாவிகளான இவ் ஆசிரியர்களை பயங்கரவாதிகள் எனக் கருதுவதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இது ஒரு மனித உரிமை மீறல் செயல் என்றும் இன ஐக்கியத்துக்கு கூக்குரலிடும் இக் கால கட்டத்தில் உயரதிகாரிகளின் போக்கு மிகவும் கண்டிக்கப் பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கி-1)

## தங்கப் பதக்கம்

யாழ். மாநகர சபை சன சமூக நிலையங்களின் சமாசத்தால் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்ற நான்கு பேர்களுக்கும் தங்கப் பதக்கங்கள் பரிசுகளாக வழங்கப்பட உள்ளது.

கீழ்ப்பிரிவில் கொழும்புத்துறை மேற்கு ச. ச. நிலையத்தைச் சேர்ந்த செல்வன் கு. த பாகரன், மத்திய பிரிவில் அரியாலை சரஸ்வதி ச. ச. நிலையத்தைச் சேர்ந்த செல்வன்நா. இராஜலக்ஷ்மன் மேற்பிரிவில் ஸ்ரான் ச. ச. நிலையத்தைச் சேர்ந்த செல்வன் த. தயாபரன், அதிமேற்பிரிவில் குருநகர் ச.ச. நிலையத்தைச் சேர்ந்த செல்வன் அ. யூஜின்ராஜ் ஆகியோர்கள் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளார்கள். (நி-1)

வட இலங்கை சங்கீத சபை பரீட்சை

## மன்னாரிலும் நடத்த கோரிக்கை

வட இலங்கை சங்கீத சபையினால் இலங்கை பூராவும் நடாத்தப்பட உள்ள பரீட்சையை இம்முறை மன்னார் கல்வி மாவட்டத்திலும் நடாத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரும் கடிதம் ஒன்றை மன்னார் மாவட்ட கல்விப் பணிப்பாளர், வட இலங்கை சங்கீத சபையின் போஷகரும் யாழ் கல்வி வலயம் 1இன் கல்விப் பணிப்பாளருமான சு. இரத்தினராசாவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதுவரை மன்னார் மாவட்ட பரீட்சார்த்திகள் வவுனியா சென்றே இப் பரீட்சையை எடுத்தார்கள் என்றும் இவ்வருடம் மன்னார் மாவட்டத்தில் இருந்து நூற்றுக்கு மேற்பட்டவர்கள் தோற்ற உள்ளதனால் மன்னார்மாவட்டத்தில் பரீட்சை நிலையம் ஒன்றை அமைக்கலாம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(நி-1)

## புதுமைமாதா திருவிழா

குருநகர் புதுமைமாதா ஆலயத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. காலை 5.30 மணிக்கு முதற்திருப்பலியும் 7.30மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும். இத் திருவிழாத் திருப்பலி யாழ். ஆயர் அதிவந்தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில்நடைபெறும். (நி - 1)

## புதிய கட்டிடம்

யாழப்பாணம் மத்தியகல்லூரியின் புதிய கட்டிடங்களுக்கு புதிதாகப் பெயர் சூட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரியின் நிறுவுனரான 'யேம்ஸ் லிஞ்ச்' அவர்களது பெயரில் மூன்று மாடிக் கட்டடத்திற்கும், ஆரம்பப்பிரிவுக் கட்டிடத்துக்கு கல்லூரியின் ஆரம்பகால அதிபர்களுள் ஒருவரான 'பீற்றர் போர்சிவல்' அவர்களின் பெயரிலும் கட்டிடங்கள் பெயர் பொறிக்கப்பட்டு பழைய மாணவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (சீ-1)

## இடமாற்றம்

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் கடந்த 22 ஆண்டுகளாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திருமதி கலைமகள் சிவராசா என்பவர் தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவிற்கு இவ்வாண்டு ஜனவரி முதல் இடமாற்றம் பெற்றுள்ளார்.
(சி - 1)

❋ உங்கள் திருப்தியே எங்கள் குறிக்கோள் ❋

உறுதியும் உத்தரவாதமும் உள்ள தங்க வைர நகைகளைப் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

## சாரங்கா நகை மாடம்
177/4 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## தேவை

❋ அச்சுக்கோப்பவர்கள்
❋ யந்திர இயக்குனர்கள்

நேரில் வரவும்:

சூரிய காந்தி
68/1, ராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

## விளம்பரதாரர் கவனத்துக்கு

'சூரியகாந்தி'யில் விளம்பரம் செய்ய விரும்புகின்றவர்கள் 68/1 ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்ற எமது தலைமை நிலைய முகவரியிலோ

அல்லது

81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற எமது கிளை அலுவலகத்திலோ எம்முடன் தொடர்பு கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

நிர்வாகி
'சூரியகாந்தி'

கடந்த பத்து ஆண்டுகளாக நீங்கள் வழங்கிய ஆதரவுக்கு நன்றி கூறும்

## துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்

மீண்டும் இப்போது சேவையாற்றுகின்றனர்
துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்
பஸ் நிலையம், சுன்னாகம்.

# இராஜினாமாவை வாபஸ் பெறுமாறு பிக்குகள் மூவர் தீக்குளிக்க முயற்சி

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் இராஜினாமாவை வாபஸ் வாங்குமாறு பிக்குகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தலதா மாளிகைக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குத் தன் தவறே காரணம் எனக் கூறி இப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தன் பதவியைத் துறக்க இராஜினாமாக் கடிதம் கொடுத்தமை தேரிந்ததே. இவ் இராஜினாமாவை நேற்று நள்ளிரவுடன் வாபஸ் வாங்கா விடின் 60 பிக்குகள் உண்ணா விரதத்தில் குதிக்கப்போவதாகவும், நான்கு நாட்களினுள் அவர் இதற்கு நடவடிக்கை எடுக்காது விடின் மூன்று பிக்குகள் தீக்குளிக்கப் போவதாக வும் எச்சரித்துள்ளனர்.

## யாழ். மக்கள் கருத்து

அனுருத்த ராஜினாமா பற்றி யாழ்ப்பாணத்தி லுள்ள பல பொதுமக்க ளிடம் நமது நிருபர் அபிப் பிராயம் கேட்டபோது இது ஒரு அரசியல் நாடகம் வெகுவிரைவிலேயே அவர் ராஜினாமாவை வாபஸ் பெறுவார் என்ற கருத்தை தெரிவித்தார் கள்.

## பி. ஜே. பி. அதிகாரத்தை பகிர்ந்துகொள்ளும்

எதிர்வரும் தேர்தலில் பார தீய ஜனதா கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்றாலும் தோழமைக் கட்சிகளுடன் அரசு அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளும் என அக்கட்சியின் தலைவர் எல்.கே. அத்வானி தெரிவித்துள்ளார்.

சென்னையில் தேர்தல் பிர சாரத்துக்காக வந்துள்ள அவர், நாட்டில் நிலையான ஆட்சி அமைப்பதில் பி.ஜே.பி உறுதியாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

## மூன்று ஆலயங்களுக்கு ஒரு கோடி ரூபா ஒதுக்கீடு

வடக்கில் உள்ள மூன்று இந்து ஆலயங்களில் புனருத் தாரணப் பணிகளுக்கென சுமார் ஒருகோடி ரூபா ஒதுக் கப்பட்டுள்ளதாக அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் ஆகிய ஆலயங்களுக்கே இந் நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. ஒவ்வொரு ஆலயத் திற்கும் தலா முப்பத்திமூன் றரை லட்சம் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது.

## கொடி விற்பனை கோடி ரூபாய் லாபம்

சுதந்திரப் பொன் விழாக் கொண்டாட்டங்கள் சிலருக்கு நல்ல வருமானத்தைத் தரப் போவது உண்மை.

கொண்டாட்டத்தின் மூலம் நல்ல வருமானம் கிடைக்குமென்றால் யார் தான் சந்தர்ப்பத்தை நழுவ விடப் போகிறார்கள்?

கொழும்பிலுள்ள கம்பனி ஒன்று பல லட்சக்கணக்கான சிங்கக் கொடிகளை பல்வேறு வடிவங்களிலும் அளவுகளி லும் தயாரித்து வைத்திருக் கிறது.

அடுத்த ஓரிரு தினங் களுள் இந்தக் கொடி விற் பனை மூலம் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் லாபம் ஈட் டலாம் என்று அந்தக் கம்பனி எதிர்பார்க்கிறது.


வெளிவந்துவிட்டது
விற்பனையாகிறது

❀ ஆண்டு 5 க்கான புலமைப் - பரிசில்க ளுக்கான் முன்னோடிப் பயிற்சித்தாள் (வினா - விடைகளுடன்)

❀ ஆண்டு 5 க்கான புலமைப் பரிசில் வினா விடைப்புத்தகங்கள் (புதிய வெளியீடுகள்) வந்துவிட்டன.

ஆசிரியர் டி. அம்பிகைபாகன்

❀ பிறைட் இன் சகல மாணவர்களுக்குமான புதிய பாடப்புத்தகங்கள் (வெற்றிக்கனி உட்பட)

❀ பாடசாலை, அலுவலகங்களுக்கான உப கரணங்கள், அப்பியாச கொப்பிகள், எழுதுகருவிகள், மற்றும் அழகுசாதனம், மெத்தைகள் என்பன.

❀ இலங்கை இந்திய சஞ்சிகைகள் புதினப் பத்திரிகைகள்

அம்பிகா

பிரதான வீதி, பருத்தித்துறை
(வேலாயுதம் பாடசாலைக்கு அருகாமையில்)


## அநுருத்த ராஜினாமா கடிதம் பத்திரிகை வாதங்களை அமைச்சர் நிராகரிப்பு

அமைச்சர் ஒருவரின் ராஜி னாமா கடிதத்தை ஜனாதி பதி ஏற்காத நிலையிலும் அவர், தன்பதவியை துறந்த வராகவே கருதப்படுவார் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத் தையின் ராஜினாமா கடிதம் தொடர்பாக பத்திரிகைகள் முன்வைக்கும் வாதங்களை அமைச்சர் ஜி. எல். பீரிஸ் மறுத்துள்ளார்.

அரச அதிகாரியை பொறுத்தவரையில் அவரின் ராஜினாமாவை அவரை நிய மித்தவரே ஏற்க வேண்டும் அதுவரை அந்த ராஜினாமா செல்லுபடியாகாது என முன் னர் உயர்நீதிமன்றம் வழங் கிய தீர்ப்பை அமைச்சர் பீரிஸ் ஆதாரமாக காட்டி யுள்ளார்.

## தொழில்நுட்ப விரிவுரையாளர் நேர்முகப்பரீட்சையை இங்கு நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவனத் திற்கு நிரந்தர விரிவுரை யாளர்களை நியமிப்பதற்காக கொழும்பில் நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சையை யாழ்ப் பாணத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ் மாவட்ட வேலை யற்ற பட்டதாரிகள் சங்கம் கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சாட் பத்திரானாவுக்கும்' யாழ். மாவட்ட பாராளு மன்றஉறுப்பினர் திரு. டக்ளஸ் தேவானந்தாவுக்கும் கடிதம் அனுப்பிவைத்துள்ளனர்.

மேற்படி பதவிக்கு யாழ்ப் பாணத்திலிருந்து பட்டதாரி கள் பலர் விண்ணப்பித்துள் ளனர்.

## ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

வடக்குக் கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சு குறித்த பகுதியிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளிட மிருந்து விஞ்ஞான / கலை வர்த்தக ஆசிரியர் பதவி களுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

## மருந்து தெளிப்பு

யாழ்ப்பாண மாநகர சபைப்பகுதியில் நுளம்பு பெருகும் இடங்களை அழித் தொழிக்கும் விசேட திட்டம் யாழ் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய் வேந்திரன் அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் பிரகாரம் நுளம்பு பெருகும் இடங்க ளானகுளங்கள், நீர்த்தேக்கங் களுக்கு 'அபேற்' மருந்து தெளிக்கும் பணியும், சுற்றுப் புறச் சூழல் சுத்திகரிப்புப் பணிகளும் வட்டார ரீதியாக மேற்கொள்ளப்படும். (ஐ.1)

## அ. தி. மு. க பிரசாரம் நேற்று ஆரம்பம்

(சென்னை)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத் தின் மாபெரும் பிரச்சாரக் கூட்டம் நேற்று சென்னை மெரீனா கடற்கரை மைதா னத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில்பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்கள் திரு. அத்வாணி திரு. வாஜ்பாய் ஆகியோர் கலந்து கொண் டனர்.

மத்திய ஆட்சியமைக்கும் நோக்குடன் அ. தி. மு. க. பாரதீய ஜனதாக்கட்சி கோபாலசாமி தலைமையி லான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகக் கழகம் ஆகியன இணைந்து போட்டி யிடுவது குறிப்பிடத்தக்கது.

## இளவரசர் சாள்ஸ் இன்று கொழும்புக்கு

பிரிட்டிஷ் இளவரசர் சார் ள்ஸ் நான்கு நாள் விஜயமாக இன்று கொழும்பு வருகிறார். இலங்கையின் சுதந்திர தின பொன் விழாக் கொண்டாட் டங்களில் இவர் பிரதம விருந் தினராகக் கலந்து கொள் வார்.

இலங்கை விஜயத்தின் பின் அவர் பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்வார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

சின்ன



துரை

## இரண்டுகால் பெருச்சாளி

கொழும்பிருந்து பருத்தித் துறைவரைக்கும் பக்குவமாய் வந்தபொதி இறக்குகையில் இரண்டுகால் பெருச்சாளி கஷ்த்ததனால் குறைகிறது.

# பிரிட்டன்வாழ் தமிழர்கள் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம்

## பிரிட்டிஷ் எம். பிக்களும் பங்குபற்றினர்

இலங்கை அரசாங்கம் தமிழர்கள் மீதுமேற் கொள்ளும் அடாவடித்தனங்களைக் கண்டித்து நேற்று லண்டன் மாநகரில் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியை பிரிட்டன் வாழ் தமிழ் மக்கள் நடத்தினர். சிறுவர்கள், வயோதிபர்கள், பெண்கள் உட்பட பதினையாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இவ்வார்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டனர்.

இலங்கைசுதந்திரம் பெற்று ஐம்பது ஆண்டுகள் நிறைவடைகின்ற போதிலும் இலங்கைத் தமிழர்கள் இன்றுவரை சுதந்திரக்காற்றை சுவாசிக்க முடியவில்லை என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்ததோடு ''தமிழர் தேசம் தமிழீழம்'' என்ற கோசமும் அவர்களால் எழுப்பப்பட்டது. இவ்வார்ப்பாட்டப் பேரணியில் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச விண்வெளி நிலையம் 13 நாடுகள் ஒப்பந்தம்

அமெரிக்கா, ரஷ்யா மற்றும் 13 நாடுகள் இணைந்து சர்வதேச விண்வெளி நிலையம் ஒன்றினை நிருமாணிக்கும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன. விண்வெளி ஆய்வின் இடம்பெற்று வரும் போட்டா போட்டிகளுக்கு இவ்வொப்பந்தம் முற்றுப்புள்ளி இட்டு விடும் என கூறப்படுகின்றது.

விண்வெளி ஆய்வுகூடம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழப்போகிறது. 1986 முதல் இது காலவரை ரஷ்யாவின் ''மிர்'' இரசாயன ஆய்வு கூடம் மட்டுமே விண்வெளியில் தனித்து இயங்குகின்றது. புதிய விண்வெளி நிலையம் மிகவும் நவீனத்துவத்துடன் செயற்படப் போகிறது.

கனடா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனங்களைச் சேர்ந்த 11 நாடுகளின் அதிகாரிகள் இவ்வொப்பந்தத்தில் கைச் சாத்திட்டனர்.

உடன் படிக்கையில் கையொப்பமிட்டுள்ள சகல நாடுகளும் எவ்வாறு ஒன்றிணைந்து செயல் படுத்துவதற்கான வடிவமைப்பு, திட்டம், நடைமுறை, ஆய்வு நிலையத்தை பயன் படுகிதுவது தொடர்பான சகல பூர்வாங்க வேலைகளும் முற்றுப் பெற்றுள்ளன.

வாஷிங்டனுக்கான ரஷ்யத் தூதுவர் யூகிவொரன் சோவ் இதில் கையொப்பமிட்டுள்ளார். அவர் இவ் உடன்படிக்கை தொடர்பாக குறிப்பிட்ட பொழுது.

மனித சமூகம் விண்வெளியில் பொதுவாக இணைந்து வாழ்வதற்கான முதலாவது அடித்தள கல் வைக்கப்பட்டு விட்டது என தெரிவித்தார்.

இவ்விண்வெளி நிலையத்தின் மாதிரி வடிவம் 10 வருடங்களுக்கு முன்னரே உருவாக்கப்பட்டு விட்டது. அமெரிக்காவின் நிதி உதவியுடன் ரஷ்யாவினால் உருவாக்கப்பட்டது.

மாஸ்கோவிலிருந்து தற்சமயம் பாய்க்கானூருக்கு நகர்த்தப்பட்டுவிட்ட நிலையம் கஸாகிஸ்தானில் வைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து இவ் வருடம் ஜூன் மாதம் 30 ஆம் திகதி விண்வெளிக்கு அனுப்பிவைக்கப்படும்.

நவம்பர் மாதம் அனுப்பி வைப்பதற்காக ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. சில தொழில் நுட்பங்கள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

பூமியைச் சுற்றி தாழ்நிலையின் விண்வெளி நிலையம் பயணம் மேற்கொள்ளும் வேளையின் 100க்கும் அதிகமான பகுதிகள் பொருத்தப்படும். இவற்றினை செயற்படுத்துவதற்கான 45 மேலதிக பயணங்கள் இடம் பெறும். 5 விண்வெளியாளர்கள் இடம்பெறும் இந்நிலையத்தில் 5 முழுமையான ஆய்வு கூடங்கள் அமைந்திருக்கும். நிரந்தரமாக நிலையத்தில் இருக்கும் விஞ்ஞானிகள் உதைபந்தாட்டமைதானமொன்றின் அளவுக்கு பெரிய அளவில் இருக்கும் ஆய்வு கூடத்தில் தமது ஆய்வு வேலைகளில் ஈடுபடுவார்கள்.

தற்சமயம் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையை விட மேலானதாக கருதப்படுகிறது.

## காவல் நிலை மீது தாக்குதல்

கந்தளாய் - கிண்ணியா வீதியில் உள்ள மூன்று பொலீஸ் காவல் நிலையங்களை விடுதலைப் புலிகள் நேற்று முன்தினமிரவு தாக்கியதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பொலிசார் பதில் தாக்குதல் நடத்தி ஐந்து புலிகளை கொன்றதாகவும் இப்பகுதியில் பின்னர் பொலீஸார் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப் பட்டது.

# பெற்றோ மக்ஸ் வெடித்து மணப்பெண் படுகாயம்

(மறுநாள் திருமணம் செய்யவிருந்த மணப்பெண் முதல் நாளிரவு நடந்த தீவிபத்தில் படுகாயமடைந்த பலிதாபகரசம்பவம் ஒன்று கொட்டிப் பகுதியில் நகைபெற்றுள்ளது.

(இரவு பெற்றோ மக்ஸ் கொழுத்தப்பட்ட போது அதுதவறுதலாக ஷெத்ததில் அருகிலிரந்த இப்பெண் படுகாயபடைற்று யாழ் ஆஸ்பத்திரியில் அனுவதிக்கப் பட்டுள்ளார். (நா-1)

## புலிகள்....

குணசிங்கன்.

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த தங்கராசா காளிப்பிள்ளை, காளிக்குட்டி மணிரத்தினம், அம்பாறையை சேர்ந்த கந்தசாமி விஜிதரன், சுப்பிரமணியம் புஸ்பகாந்தன் வவுனியாவைச் சேர்ந்த வீரையா விக்னேஸ்வரன் சரவணன் மல்லிகாதேவி, தியாகராசா தமிழ்ச்செல்வன், குலசிங்கம் குலநாயகம்

## உயிரிழப்புகள்...

லங்களை படையினர் கைப்பற்றியதாகவும் மேலும் தெரிவித்தது.

இதேசமயம் கிளிநொச்சி மோதல்களில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை படைத்தரப்பால் கூறப்பட்ட தொகையிலும்விட அதிகம் என பி.பி.ஸி.யின் கொழும்பு செய்தியாளர் குறிப்பிட்டார்.

வவுனியா - கிளிநொச்சி பிரதான பாதையைத் திறப்பதற்காக கடந்த 9 மாதங்களாக நடைபெறும் 'ஜயசிகுறு' இராணுவ நடவடிக்கையில் இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்[illegible]துள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# இராணுவ கெடுபிடிகள் நிலமையை மோசமாக்கும்!

## ஈரான் எச்சரிக்கை

ஈராக்கில் ஏற்பட்டுள்ள பதற்றநிலையை தொடர்ந்து அதன் மீது திணிக்கப்படும் இராணுவ தாக்குதல்கள் ஐ. நா. ஆயுத கண்காணிப்பாளர் கெடுபிடி நிலையைத் தீர்ப்பதற்குப் பதிலாக மேலும் அதிகரிக்கும் என ஈரான் கூறியுள்ளது.

ஐக்கிய நாடுகளாலோ பிரிட்டினாலோ தொடரப்படும் எந்தவிதமான தாக்குதல்களையும்த தெஹ்ரான் எதிர்க்கும் என ஈரானிய வெளிவிவகார அமைச்சர் கமால் கராஸி ஈரானின் உத்தியோகபூர்வ செய்தி ஸ்தாபனமான இர்னாவுக்கு கூறினார். எந்தவித இராணுவ அழுத்தமும் பிரச்சினைகளைச் சிக்கலாக்கும் என்று தெரிவித்த கராஸி இரு தரப்பினரும் சர்வதேச சட்ட விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு இராஜதந்திர ரீதியாக தீரவு காண முனைய வேண்டும் என்று ..கூறினார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மெடலின் அல்பிரைட் ஐரோப்பாவுக்கு விஜயம் செய்துள்ளதுடன் பிரெஞ்சு, ரஷ்ய வெளிவிவகார அமைச்சர்களையும் சந்தித்தமையான பிராந்திய பதற்றத்தை அதிகரித்துள்ளது என்றும் அவர் சொன்னார்.

தேவைப்பட்டால் சர்வதேச பின்னணி எதுவும் இல்லாமலே ஈராக் மீது இராணுவ அழுத்தம் பிரயோகிக்கப்படும் என அல்பிரைட் குறிப்பிட்டிருந்தார். ஈராக்கிடம் இரசாயன ஆயுதங்கள் உள்ளதா என்பதை உறுதிப்படுத்த இது முடிவாக அமையும் என்று அவர் மேலும் கூறினார்.

சதாம்ஹுசேனை மன்னிப்பதற்கு இனி எவ்வித மன்னிப்பும் கிடையாது. இதே வேளை 30 கப்பல்கள் 300 யுத்த விமானங்கள் ஆகியவற்றை அமெரிக்கா வளைகுடாவில் நிறுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக் விவகாரம் செனட் ஒத்திவைப்பு

ஈராக் மீதான ஜனாதிபதி பின் கிளின்டனின் நடவடிக்கைக்கு ஆதரவளிப்பது தொடர்பான அமெரிக்க செனட்டின் இடம் பெற்ற கலந்துரையாடலில் இரு செனட்டர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர். இதன் காரணமாக செனட் சபை ஒத்தி வைக்கப்பட்டது.

ஈராக்கிற்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி எந்த அளவிற்கு சக்தியை பயன்படுத்த முடியும் என்பது குறித்து செனட்டில் விவாதம் ஏற்பட்டது. என்ன நடவடிக் எடுக்க வேண்டும் என்பது குறித்தும் விவாதம் இடம் பெற்றது.

என்ன விதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குற்த்து செனட் சபைக்கு தெரிவு ஏற்பட வேண்டும். அதற்கு முன்னரே ஜனாதிபதி ஏதேனும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்பார்ப்பது அவசர முடிவாகும் என செனட்டர் கிலியேண்ட் தெரிவித்தார். செனட்டர் ரிச்சர்ட் டேர்பினும் இக் கருத்தை எதிரொலித்தார். இவர்கள் இருவரும் ஜனநாயக கட்சியை சேர்ந்தவர்கள்.

சதாம் ஹுசேய்ன் ஐ. நா. ஆயுதப் பரிசோதனைக் குழுவினருக்கு தமது நடவடிக்கைகளுக்கு செயல்படுத்த இடமளிக்கவில்லை என்பதற்காக அங்கே போய் குண்டு போட்டால் விசயம் முடிந்து விடுமோ? இல்லை அது மட்டும் போதுமா? என செனட்டர் டேபின் வினவியுள்ளார்.

ஈராக்கின் இரசாயன ஆயுதங்களை அழிப்பதே நோக்கமாயின் குண்டுத் தாக்குதல் நடவடிக்கைகள் அந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியாது எனவும் அவர் வாதிட்டார்.

ஜனாதிபதி பில் கிளிங்டன் கடந்த வியாழக்கிழமை ஈராக்கிற்கு எச்சரிக்கை விடுத்தார்: ஐ.நா.வின் தீர்மானத்திற்கு ஈராக் கட்டுப்பட வேண்டும். வளைகுடாவில் அமெரிக்காவின் 30 கப்பல்களும் 30 யுத்த விமானங்களும் இருக்கின்றன. இவற்றை ஈராக் மீது நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ப்பந்தம் ஏற்படலாம் என்பது போல் அவருடைய எச்சரிக்கை அமைந்திருந்தது.

அடுத்த வாரம் செவ்வாய், புதன் கிழமைகளில் செனட் சபை மறுபடியும் கூடி இது தொடர்பாக விவாதத்தில் ஈடுபடும்.

## புதிய நியமனம்

வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் அனுசரணையுடன் யாழ் செயலகத்தால் நுகர்வோர் நலன்புரி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரச கூட்டுத்தாபனங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றினால் கப்பல்க் கட்டணமின்றி யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரும் பொருட்களை பாவனையாளர்கள் நியாய விலையில் பெற்றுக்கொள்வதை உறுதி செய்தவுடன் தனியார் வியாபாரிகள் குறித்த அமைப்புக்களில் இருந்து மொத்தமாக பொருட்களை கொள்வனவு செய்வதை தடுத்து நுகர்வோர்க்கு பரந்தளவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்வதிலும் இவ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுவர்.

## சுற்றி வளைப்பு

குருநகர் ஐந்து மாடிக் குடியிருப்பு பகுதி நேறைய தினம்காலை 8 மணி தொடக்கம் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப் பட்டது. இங்கு வசிக்கும் குடியிருப்பாளர்க்ள் முன்னுள்ள விளையாட்டு மைதானத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டார்கள். எவரும் கைது செய்யப்படவில்லை.

ஆயிரம் ரூபாய்

பரிசுப் போட்டி

விபரங்கள்

விரைவில்

''சூரிய காந்தி'' நிறுவனத்துக்காக அவர்களது அச்சகத்தில் 1998ம் ஆண்டு பிப்ரவரி 2ம் தேதி 68, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்: சு. குமாரசுவாமி.